## விமான நிலையத்தில் இருந்து

# தாம்பரம் வழியாக மெட்ரோ ரெயில்!

## கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க ஆய்வு!!

சென்னை டிசம்பர் 10 மெட்ரோ ரெயில் திட்டம் பல்வேறு வழித்தடங்களில் சென்னை மாநகரின் பெரும்பாலான பகுதிகள் வழியாக செல்கிறது. இதன் தொடர்ச்சியாக விமான நிலையம் முதல் தாம்பரம், வண்டலூர்வழியாககிளாம்பக்கம் வரை மெட்ரோ ரெயில் பாதையை விரிவுபடுத்த மெட்ரோ ரெயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதன் செயலாக்க ஆய்வையும்தொடங்கியுள்ளது.

தென்மாவட்டங்களுக்கு செல்லும்மக்கள்பயன்படுத்தும்விதமாகசென்னைதாம்பரத்திற்கு அருகில் உள்ள கிளாம்பக்கம் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு விரைவில் துவங்கப்பட உள்ளது. இந்த பகுதியை மெட்ரோ ரெயில் பாதையுடன் இணைப்பதோடு புறநகர் வாழ் பொது மக்களின் தேவையையும் பூர்த்தி செய்யும் விதமாக சென்னைவிமானநிலையம் வரையிலான மெட்ரோ வழித்தடத்தை கிளாம்பாக்கம் வரை விரிவுப்படுத்தமெட்ரோரெயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரி கூறியதாவது:

### ஆய்வு

ஒரிரு ஆண்டுகளில் விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம்வரையிலான மெட்ரோ ரெயில் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இந்த திட்டத்தின் சார்பாக செயலாக்க ஆய்வை மேற்கொள்ள டெண்டர் விடும் பணியில் மெட்ரோ ரெயில் நிர்வாகம் இறங்கியுள்ளது. மெட்ரோரெயிலின் விமான நிலையம் வரையிலான முதல் வழித்தடம் வண்டலூர் ஜி.எஸ்.டி. சாலை அருகில் உள்ள கிளாம்பாக்கம் வரை விரிவுப்படுத்த உள்ளது.

இத்திட்டமானது புறநகரான தாம்பரம், வண்டலூர் போன்றபகுதிகளில் வாழும் மக்களின் மெட்ரோ ரெயிலுக்கான தேவையும் பூர்த்தி செய்யும்.

இந்த செயலாக்க ஆய்வில் விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான வழித்தடத்தை ஆய்வு செய்தல், எத்தனை மெட்ரோ ரெயில் நிலையங்கள் நிறுவப்பட வேண்டும் என ஆய்வுசெய்தல், மேலும் அது அமையும் இடங்கள், அதற்குத் தேவையான நிலம், மேலும் பயனாளிகளின் எண்ணிக்கை

என பல்வேறு காரணிகளை ஆய்வுசெய்தபின்திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கவும் அதற்கு தேவையான நிதியை கோரவும் ஆவண செய்யப்படும். சென்னையின் முக்கிய போக்குவரத்து தடங்களான சென்ட்ரல், எழும்பூர், கோயம்பேடு ஆகியபகுதிகளைமெட்ரோ ரெயில்நிர்வாகம்ஏற்கனவே இணைத்துள்ளது. அதே போலபுறநகர்முக்கியபோக்குவரத்து பகுதியான தாம்பரம்வரைநீட்டிக்கவேண்டும் என்றகோரிக்கைமக்களிடம் வலுத்துள்ளது. இந்தத் திட்டம் கிளாம்பாக்கம் வரை விரிவுப்படுத்தப்பட்டால் பயனாளிகள்சென்னைமாநகரின் எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் மெட்ரோ ரெயிலைபயன்படுத்திசெல்லலாம்.

இவ்வாறு அவர் கூறினார் மேலும் இது குறித்து இந்த வருடம் மே மாதம் சென்ட்ரலில் இருந்து நேரு பார்க் வழியாக செல்லும் மெட்ரோ ரெயில் தடத்தில் துவங்கி வைத்த போது

மெட்ரோ ரெயில் திட்டத்தைகிளாம்பாக்கம்வரை விரிவுப்படுத்தும் திட்டத்திற்கான செயலாக ஆய்வுகள் துவங்கப்பட்டு, அனைத்து விரைவு போக்குவரத்து தளங்களை இணைக்க வழி வகை செய்யப்படும், என தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி கூறியது குறிப்பிடத்தக்கது.